162_164_Tamil 25-07-2005 14:18 Pagina 163



**மரங்கள் இளஞ்சிவப்பு நிறமானவை. கோசோவோவில் உள்ள சிறுவர்களுக்கான உளசமூக ஆதரவை வழங்குதலில் படைப்பாக்கத்திறனின் பயன்பாடு: ஒரு தொடர்ச்சியான கற்றற் செயற்பாடு**

இந்தக் கட்டுரையானது, கோசோவோவிலுள்ள சிறுவர்களிடையே நடைமுறைப்படுத்தப் படுகின்ற, படைப்பாக்கச் செயற்பாடுகளும் விளையாட்டுக்களும் அடிப்படையாக உள்ள, ஒரு நீண்டகால உளசமூகத்தலையீட்டுடன் தொடர்புபட்ட கற்றற் செயற்பாடுகள் பற்றிய உள்ளறிவை வழங்குவதனைத் தனது இலக்காகக் கொண்டிருக்கின்றது. தேசிய அணிகளுடனான (பகுதியாக ஒழுங்கமைக்கப்பட்ட) நேர்காணல்கள் மூலமும், செயன்முறைகளை நேரடியாக அவதானிப்பதன் மூலமும் தகவல்கள் திரட்டப்பட்டன. இந்தவாறு, தேசிய அணிகள் தமது அனுபவங்களைக் கீறுவது, ஒரு உளசமூகத் திட்டத்தினது வினைத்திறனையும், பாதிப்பையும் எடுத்துக்காட்டும் நல்லதொரு, தேவையான உபகரணமாக இருக்கின்றது என்பது இங்கு விவாதிக்கப்பட்டுள்ளது.

**முக்கிய சொற்பதங்கள்:** சிறுவர், விளையாட்டு, உளசமூக ஆதரவு, மனவடு

**யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் இசைச்சிகிச்சை**

சர்வதேச மனிதாபிமான உதவிகளிலே இசைச்சிகிச்சை என்னும் பரப்புத் தொடர்பாக எந்தவிதமான ஆய்வுகளும் இன்றுவரை செய்யப்படவில்லை. இந்த நிலைமையை மேலும் விரிவாகப் பார்ப்பதுவும், முரண்பாட்டிற்குப் பிற்பட்ட நிலைமைகளில் மனவடுவினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இசைச்சிகிச்சையைப் பயன்படுத்தி உளசமூக உதவிகளை வழங்கும் நிறுவனங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களைப் பற்றிய தகவல்களை உள்ளடக்குவதுமே இந்த ஆய்வுக்கட்டுரையின் இலக்குகளாக இருக்கின்றன. இந்தக் கட்டுரை இவ்வாறான நிகழ்ச்சித் திட்டங்கள் பற்றிய ஒரு பருமட்டான வரைவையும் அவர்களது வேலைகளையும் பற்றி விவரிப்பதன் மூலம் சர்வதேசரீதியில் உளநல உதவிகளை வழங்குகின்ற ஏனைய நிறுவனங்களுக்கு ஒரு தகவல் களஞ்சியமாகவும் அமைந்திருக்கின்றது.

**முக்கியமான சொற்பதங்கள்:** இசைச்சிகிச்சை, யுத்தம், பாதிக்கப்பட்ட பிரதேசங்கள், சர்வதேச மனிதாபிமான உதவிகள், மனவடு, குணமாக்கல், கலாசாரங்களுக்கிடையேயான உளநல உதவிகள்

**திபெத்தியக் குணமாக்கல் முறைகளை ஆய்வுசெய்தல்: நேபாளத்தில் உள்ள திபெத்திய அகதிகள் மீதான ஒரு உளசமூகத் தேவை மதிப்பீடு**

இந்தக் கட்டுரையானது நேபாளத்தில் உள்ள 21 திபெத்திய அகதிகள் மீது செய்யப்பட்ட உளநலப் பிரச்சினைகள் தொடர்பான ஆய்வினை அடியொற்றி அமைந்திருக்கின்றது. இது சுகநலம், குணமாக்கல் தொடர்பான திபெத்தியப் பார்வையினை விவரிக்கின்றது. ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்களுள் அநேகமானோர் திபெத்திய குணமாக்கல் முறைகளையே உபயோகித்தனர். ஒரு சிறிய அளவினர் மட்டும் மேலைத்தேய அலோபதி மருந்துகளைப் பாவித்தனர்.